(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 44.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 மார்ச் 19, புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

கௌரவ **(டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

கௌரவ **(டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

கௌரவ **(திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

கௌரவ **கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

கௌரவ **(பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

கௌரவ **சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

கௌரவ **பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

கௌரவ **ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

கௌரவ **வசந்த சமரசிங்க,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ **சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ **சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ **சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க குணசேகர,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எண்டன் ஜயகொடி,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ ஆர்.எம். ஜயவர்தன,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

**கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப்,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ஹங்சக விஜேமுணி,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷண சூரியப்பெரும,** நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம**

**கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி**

**கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி**

**கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்**

**கௌரவ உபுல் கித்சிறி**

**கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி**

**கௌரவ லசித் பாஷண கமகே**

**கௌரவ திலங்க யூ. கமகே**

**கௌரவ (திருமதி) நிலூஷா லக்மாலி கமகே**

**கௌரவ அஜந்த கம்மெத்தெகே**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ அஜித் கிஹான்**

**கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ**

**கௌரவ அசோக குணசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ ருவன்திலக்க ஜயகொடி**

**கௌரவ நலீன் பண்டார ஜயமஹ**

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன

கௌரவ சந்தன தென்னகோன்

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சுஜீவ திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ நந்த பண்டார

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ சுனில் பியன்வில

கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா

கௌரவ இஸ்மாயில் முத்து மொஹம்மட்

கௌரவ தனுஷ்க ரங்கனாத்

கௌரவ சுனில் ரத்னசிரி

**கௌரவ ஆர்.எம். காமினி ரத்நாயக்க**

**கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக**

**கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷன ராஜகருணா**

**கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய**

**கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன**

**கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன**

**கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ அதுல வெலதகொட**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ பஸ்மின் சரீப்**

**கௌரவ திலிண சமரகோன்**

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்**

**கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ அரவிந்த செனரத்**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ தினேஷ் ஹேமந்த**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்**

**கௌரவ சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத்**

**கௌரவ முஹம்மட் பைசல்**

**கௌரவ ரியாஸ் பாருக்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

**I**

"பத்தாவது பாராளுமன்றத்திற்காக இளைஞர்களுக்கான பாராளுமன்ற ஒன்றியத்தினை தாபிப்பது தொடர்பான பிரேரணைக்கு 2025 மார்ச் 15 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதென்பதை நான் இச்சபைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்."

**II**

"கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா, இந்தச் சபையிலும் சபைக்கு வெளியிலும் குறிப்பாக, சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி தனி நபர்களுக்கும், தனி நபர் குழுக்களுக்கும் மற்றும் பலதரப்பட்ட அமைப்புகளுக்கும் எதிராக மிகவும் இழிவான சொற்பதங்களைப் பிரயோகித்து மேற்கொண்டுள்ளதும் மேற்கொண்டு வருவதுமான சர்ச்சைக்குரிய மற்றும் இழிவுக்குட்படுத்தும் கூற்றுகளால், தனிப்பட்ட முறையில் பல்வேறு நபர்களுக்கும் பல்வேறு சமூக மற்றும் இனக் குழுமங்களுக்கும் மன அமைதியை குலைக்கும் நிலை ஏற்படுகின்றதென பல்வேறு வழிமுறைகளில் எனக்கு முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்து இந்தச் சபைக்கு தெளிவுப்படுத்த விரும்புகின்றேன்.

கௌரவ உறுப்பினர் (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா அவர்கள், தனிப்பட்ட முறையில் பெண்கள் உட்பட பல்வேறு நபர்கள், பல்வேறு சமூக குழுக்கள் மற்றும் சமயக் குழுக்களை இலக்கு வைத்து முன்வைத்துள்ள பல்தரப்பட்ட, இழிவுக்குட்படுத்துகின்றதும் அநாகரிகமானதும் அத்தோடு கடுமையான சர்ச்சைகளுக்கு வித்திடுகின்றதுமான கூற்றுகள் சம்பந்தமாக பல்வேறு நபர்கள், பல்வேறு சமூக அமைப்புகள் அதேபோல், இந்தச் சீருயர் சபையை பிரதிநிதித்துவம் செய்யும் அரசாங்க கட்சியையும் எதிர்க்கட்சியையும் சேர்ந்த பல மக்கள் பிரதிநிதிகள் உட்பட்ட பல்வேறு தரப்பினர் தனிப்பட்ட முறையில் என்னிடம் முறைப்பாடு செய்து அத்தகைய கூற்றுகள் சம்பந்தமாக அவர்களினது கடுமையான அதிருப்தியையும் கவலையையும் வருத்தத்தையும் தெரிவித்துள்ளதோடு, இந்தச் சீருயர் சபையின் தலைவர் என்ற வகையில் அத்தகைய செயற்பாடுகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஏற்கனவே என்னிடம் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்கள் எனும் விடயத்தை இச்சபைக்கு அறியத்தர விரும்புகின்றேன்.

குறிப்பாக, இந்தச் சீருயர் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் தனக்குரிய சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி, இந்தச் சபைக்கு வந்து பதிலளிக்க முடியாத தரப்பினர் சம்பந்தமாகவும் இச்சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய மக்கள் பிரதிநிதிகள் சம்பந்தமாகவும் அத்துடன் பிற பல்வேறு வெளிமட்ட சமூக மற்றும் சமய அமைப்புகள் உட்பட பல்வேறு இனக் குழுமங்களையும் இனப் பிரிவினரையும் இலக்கு வைத்து மிகவும் இழிவான சொற்பதங்களைப் பிரயோகித்து, அவர்களின் தனிப்பட்ட வாழ்வில் பாரியதொரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றதும் அபகீர்த்தியை விளைவிக்கின்றதுமான கூற்றுகளுக்கு சபாநாயகர் என்ற வகையில் எனது கடுமையான அதிருப்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சீருயர் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதி என்ற வகையில், அவர் மேற்கொள்கின்ற இவ்வகையான இழிவுபடுத்தும் மற்றும் அநாகரிகமான கூற்றுகளால் சபையின் சீருயர் தன்மைக்கு பாரிய களங்கமும் அவமதிப்பும் ஏற்படுகிறது என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். மேலும், இது தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் பாரிய குந்தக நிலையை ஏற்படுத்துகின்றது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில், இவ்வாறான கூற்றுகளைத் தவிர்க்குமாறு பல வழிகளில் கடிந்துரைத்தபோதிலும், அந்த அறிவுறுத்தல்களை ஏற்று நடப்பதற்கு குறித்த பாராளுமன்ற உறுப்பினர் முற்றாகத் தவறியிருப்பதனையும் நான் அவதானிக்கின்றேன்.

குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் இத்தகைய செயற்பாடுகள் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகள், பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் தொன்றுதொட்டு பேணப்பட்டு வருகின்ற தொன்மையான பாராளுமன்ற மரபுகள் ஆகியவற்றுக்கு முற்றிலும் முரணாகவும் இசைந்தொழுகாத வகையிலும் இருக்கின்றதென இங்கு விசேடமாக வலியுறுத்துகின்றேன் .

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா அவர்களினால் முன்வைக்கப்படும் இக்கூற்றுக்கள் தொடர்பாக மிக ஆழமாக ஆராய்ந்து, அவற்றை பரிசீலித்ததன் பின்னர் அதன் மூலம் தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்திற்கும் ஏற்படும் அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டு, நிலையியற் கட்டளை ஏற்பாடுகளின் பிரகாரம், சபாநாயகர் என்ற வகையில் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2025ஆம் ஆண்டு மார்ச்ச மாதம் 20 மற்றும் 21ஆந் திகதிகளிலும், 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08, 09 மற்றும் 10ஆந் திகதிகளிலும், 2025 ஆம் ஆண்டு மே மாதம் 06, 07 மற்றும் 08ஆந் திகதிகளிலும் என மொத்தமாக எட்டு (08) நாட்கள் நடைபெற உள்ள பாராளுமன்ற அமர்வுகளின்போது, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா அவர்களின் எந்தவொரு கூற்றையும் செவிப்புல, கட்புல மற்றும் சமூக ஊடகங்களில் நேரடியாக ஒலி / ஒளிபரப்புச் செய்வதை இடைநிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கட்டளையிடுகின்றேன்.

மேலும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அவ்வாறான இழிவுக்குட்படுத்தும், அநாகரிகமான மற்றும் கீழ்த்தரமான சொற்பதங்களைப் பிரயோகித்து, கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்படும் அனைத்து கூற்றுக்களையும் ஹன்சாட் அறிக்கையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என இந்தச் சீருயர் சபைக்கு அறியத்தர விரும்புகிறேன்.

அத்துடன், இவ்வாறு நேரடி ஒலி / ஒளிபரப்பை இடைநிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் காலப்பகுதியில், கௌரவ உறுப்பினர் ஆற்றும் உரைகளின் உள்ளடக்கம் மற்றும் தெரிவிக்கப்படும் கூற்றுக்கள் சம்பந்தமாக ஆராய்ந்து, இத்தற்காலிக தடையை நீக்குவது தொடர்பாக பரிசீலிக்கப்படும் என்பதை மேலும் தெரிவிக்க விரும்புகிறேன்.''

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) கோட்டே, மிரிஹான ரஜ மகா விகாரை வீதி, இல. 137/3 இல் வதியும் திரு. எச்.ஏ. சமன்பிரிய ரொட்ரிகோவினது 2025.02.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) கொழும்பு 07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இல. 72 இல் வதியும் திருமதி டப்ளியூ.ஏ.ஐ. விமர்சனீ மிஹிரானி த சில்வாவினது 2025.01.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா சமர்ப்பித்தார்.

(2) கல்கமுவ, தம்புத்த, மைலேவ, இல. 91 இல் வதியும் திரு. டி.எம். விஜேசிங்கவினது 2024.12.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சந்தன தென்னகோன் சமர்ப்பித்தார்.

(3) கம்பஹா, யக்கல வீதி, த சேரம் பிரதேசம், இல. 72/4/டி இல் வதியும் திரு. யூ.ஜி.பி.எம். உடலமத்தவினது 2025.01.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ருவன் மாபலகம சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக ஒவ்வோர் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவும் அமைச்சரவையின் உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சர் அதன் தவிசாளராகவும், இராஜாங்க அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் தெரிவுக் குழுவினால் நியமிக்கப்படும் வேறு இருபத்தொன்பது (29) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. சட்டவாக்க நிலையியற் குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 113 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, சட்டவாக்க நிலையியற் குழுவானது, தவிசாளராக பிரதிச் சபாநாயகரையும் குழுக்களின் பிரதித் தவிசாளர் உட்பட தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேறு பதினைந்து (15) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 115 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி திருத்தத்துடன் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவானது தவிசாளராகச் சபாநாயகரையும், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், பாராளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின்

முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் உட்பட தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வேறு இருபது (20) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7. **நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 116 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவானது, தவிசாளராகச் சபாநாயகரையும் பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் மற்றும் தெரிவுக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வேறு பத்து (10) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8. **சபைக் குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 117 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, சபைக் குழுவானது, தவிசாளராகச் சபாநாயகரையும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வேறு பதினைந்து (15) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9. **ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவானது, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பதினெட்டு (18) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10. **அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவானது தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் முப்பத்தொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11. **அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக்

குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவானது, தெரிவுக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் முப்பத்தொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. அரசாங்க நிதி பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, அரசாங்க நிதி பற்றிய குழுவானது, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பதினெட்டு (18) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. வழிவகைகள் பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 124 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, வழிவகைகள் பற்றிய குழுவானது, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் இருபத்து மூன்று (23) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. பொது மனுக்கள் பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 125 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, பொது மனுக்கள் பற்றிய குழுவானது, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் இருபத்தொன்பது (29) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**15. உயர் பதவிகள் பற்றிய குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 127 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, உயர் பதவிகள் பற்றிய குழுவானது, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பத்தொன்பது (19) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**16. பின்வரிசைக் குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 129 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால், தடைபெறாமல் 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு,

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, பின்வரிசைக் குழுவானது, அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் மற்றும் தெரிவுக் குழுவினால் நியமிக்கப்படும் அரசாங்கக் கட்சியின் எட்டு (08) பின்வரிசை உறுப்பினர்களையும் எதிர்க்கட்சியின் எட்டு (08) பின்வரிசை உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**17. ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட இருபத்துநான்காவது நாள்)**: குழுநிலையில் மேலும் பரிசீலிக்கப்பட்டது.

(குழுநிலையில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

தலைப்பு 116

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

"நிகழ்ச்சித்திட்டம் 10/- ரூபாவினால் குறைக்கப்படுமாக" என கௌரவ முஜிபுர் ரஹுமான் பிரேரித்தார்.

மு.ப. 11.09 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

பி.ப. 1.00 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.

பி.ப. 3.54 மணிக்கு கௌரவ கிட்ணன் செல்வராஜ் தலைமை தாங்கினார்.

பி.ப. 5.38 மணிக்கு கௌரவ அரவிந்த செனரத் தலைமை தாங்கினார்.

பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

தலைப்பு 116

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

116 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 471,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

116 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 33,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மீண்டுவரும் செலவினம்)

116 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 747,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மூலதனச் செலவினம்)

116 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 102,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 295

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

295 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 301,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

295 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 30,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 297

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

297 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 105,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 298

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

298 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 232,800,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 299

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

299 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 84,200,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 300

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

300 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 112,000,00 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

300 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 205,000,00 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்த திருத்தம்: 18 ஆம் பக்கத்தில் 11 ஆவது வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல் வேண்டும்:—

"மூலதனம் 497,000,000 "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு அட்டவணையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 301

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சார்பாக, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்த திருத்தம்: 19 ஆம் பக்கத்தில் 4 ஆவது வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றைப் பதிலீடு செய்தல் வேண்டும்:—

“நிகழ்ச்சித்திட்டம் 01 செயல்முறைச் செயற்பாடுகள் 88,000,000 126,100,000 ”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு அட்டவணையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்” எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 302

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

302 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 26,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

302 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 900,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“குழு செய்து முடித்த பரிசீலனை பற்றித் தலைவர் சபைக்கு அறிவிப்பதுடன் குழு மீண்டும் கூடுவதற்கு அனுமதி கோருவாராக” என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குழு செய்து முடித்த பரிசீலனை பற்றி அறிவிக்கப்பட்டது. 2025 மார்ச் 20 ஆம் திகதி வியாழக்கிழமை குழு மீண்டும் கூடும்.

**18. ஒத்திவைப்பு (அரச சேவையில் பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 19/2022 இன் தாக்கம்):** “இப் பாராளுமன்றம் தற்பொழுது ஒத்திவைக்கப்படுமாக”என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

அவ்வேளை, நேரம் பி.ப. 6.30 மணியாகிவிடவே, தலைமைதாங்கும் உறுப்பினர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2025 பெப்ரவரி 21 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கிணங்க, 2025 மார்ச் 20 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.